செ.வெ.எண்: 436 13/7/07

# அரசு செய்திக்குறிப்பு

2006–07 ம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பட்டதாரி ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட்ட 947 தேர்வர்களுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் நியமன ஆணை வழங்குவது சார்பாக 14.7.2007 அன்று நடைபெறுவதாக இருந்த கலந்தாய்வு பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளினைக் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுவதை முன்னிட்டு 21.7.2007 தேதிக்கு மாற்றி கீழ்க்கண்ட விவரப்படி நடத்தப்படவுள்ளது.

| கலந்தாய்வு நடைபெறும் இடம் | கலந்தாய்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | பாடம் |
|---|---|---|
| அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, அசோக்நகர், சென்னை–83 | 21–07–2007 காலை 9.00 மணி | தமிழ் |
| | | ஆங்கிலம் |
| | | கணிதம் |
| | | வரலாறு & புவியியல் |
| | 21–07–2007 பிற்பகல் 2.00 மணி | இயற்பியல் |
| | | வேதியியல் |
| | | தாவரவியல் |
| | | விலங்கியல் |

கலந்தாய்வுக்கு வருகை தரும்போது கீழ்கண்ட ஆவணங்களை தவறாமல் கொண்டு வருதல் வேண்டும்.

1. தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு அசல்.( **Hall Ticket Original)**
2. ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பெறப்பட்ட தெரிவுக்கடிதம் **(Selection Intimation)**

வெளியீடு:- இயக்குநர், செ.ம.தொ.து, சென்னை-9.